கோவை மாவட்டத்தில் அதிமுக சார்பில் சூலூர், தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, சிங்காநல்லூர், கவுண்டம்பாளையம், பொள்ளாச்சி ஆகிய 6 தொகுதிகளில், கடந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தற்போதைய எம்எல்ஏக்களே மீண்டும் களம் காண்கின்றனர்.



கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் கோவை தெற்கில் பாஜகவின் வானதி சீனிவாசன், கோவை வடக்கில் அதிமுகவின் அம்மன் கே.அர்ச்சுணன் ஆகியோர் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். நடப்புத் தேர்தலில் இருவரும் பரஸ்பரம் தொகுதிகள் மாறி போட்டியிடுகின்றனர்.



திருப்பத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நிறைவு விழாவில் மாணவருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்**

## நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் நிறைவு

**திருப்பத்தூர்**

திருப்பத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நிறைவடைந்தது.

திருப்பத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த திட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கப்பட்டுப் படித்துக் கொண்டே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு பேரணிகள் உள்ளிட்ட பல்வேறு சமுதாய பணிகளைச் செய்து வருகின்றனர்.

இதில், ஒரு அங்கமாக ‘என் தேசத்தைத் தட்டி எழுப்புவதற்கான இளைஞர்கள்’ என்ற கருப்பொருளில் பள்ளத்தூர் கிராமத்தில் நாட்டு நலப்பணித் திட்டச் சிறப்பு முகாம் நடைபெற்றது. கடந்த 2 நாட்களாக நடைபெற்ற சிறப்பு முகாமின் நிறைவு விழா நேற்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் குமரேசன் தலைமை தாங்கினார். திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் விஜய் ஆனந்த் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நாட்டு நலப்பணி திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் அதனால் மாணவர்களுக்கு ஏற்படும் பயன்கள் ஆளுமைகள் தலைமைப் பண்புகள் பற்றி அவர் எடுத்துரைத்தார்.

மேலும், நாட்டு நலப்பணித் திட்ட முகாமில் சிறப்பாக பணியாற்றிய மாணவர்களுக்குப் பாராட்டு சான்றிதழும் அனைத்து மாணவர்களுக்கும் நாட்டு நலப்பணி திட்ட முகாம் சான்றிதழை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நாட்டு நலப்பணித் திட்டத்தின் அலுவலர் நரசிம்மன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

**சீரான குடிநீர் வழங்க வலியுறுத்தி**

# வாணியம்பாடி நகராட்சி அலுவலகத்தில் தர்ணா

**பொதுமக்களிடம் அதிகாரிகள் பேச்சுவார்த்தை**

**வாணியம்பாடி**

வாணியம்பாடி நகராட்சி பகுதிகளில் சீரான குடிநீர் வழங்க வலியுறுத்தி காலி குடங்களுடன் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்ட பொதுமக்கள் தர்ணாவில் ஈடுபட்டதால் சலசலப்பு ஏற்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சியில் 36 வார்டுகள் உள்ளன. இந்த நகராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நகராட்சிக்கு உட்பட்ட 17-வது வார்டு காதர் பேட்டை பகுதியில் கடந்த 10 நாட்களுக்கு மேலாகக் குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை என கூறப்படுகிறது. இது தொடர்பாக நகராட்சி அலுவலகத்தில் பலமுறை எடுத்துக்கூறியும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் பொறுமையிழந்த காதர் பேட்டையை சேர்ந்த பொதுமக்கள் காலி குடங்களுடன் நகராட்சி அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்டு, சீரான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி திடீரென தர்ணாவில் ஈடுபட்டனர்.



வாணியம்பாடி நகராட்சி அலுவலகம் முன்பாக குடிநீர் கேட்டு தர்ணாவில் ஈடுபட்ட பொதுமக்கள்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறும்போது, “வாணியம்பாடி நகராட்சியில் காதர்பேட்டை பகுதி பிரதான பகுதியாகக் கருதப்படுகிறது. இங்குக் குடியிருப்புகள் மட்டுமின்றி வணிக வளாகங்கள், உணவகங்கள், தனியார் நிறுவனங்கள், மசூதி ஆகியவை உள்ளன. இப்பகுதியில் ஆயிரக்கணக்கான வீடுகளும் உள்ளன.

இந்நிலையில், கடந்த 10 நாட்களுக்கு மேலாக எங்கள் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை. இது தொடர்பாக நகராட்சி அலுவலகத்தில் முறையிட்டால் இங்குள்ள அதிகாரிகள் முறையாகப் பதில் அளிக்கவில்லை. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் எங்கள் பகுதியில் அதிகமாக உள்ளனர். தற்போது தேர்வு நேரம் என்பதால் குடிநீர் இல்லாமல் நாங்கள் எங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப மிகவும் சிரமப்பட்டு வருகிறோம். எனவே, எங்கள் பகுதிக்குச் சீரான குடிநீர் வழங்க வேண்டும் என வலியுறுத்தி இந்த தர்ணாவில் ஈடுபட்டுள்ளோம்” என்றனர்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் வாணியம்பாடி நகர போலீஸார் மற்றும் நகராட்சி அதிகாரிகள் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, குடிநீர் வழங்க ஓரிரு நாளில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். இதையேற்ற பொதுமக்கள் தர்ணாவைக் கைவிட்டுக் கலைந்து சென்றனர்.

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
repvellore@hindutamil.co.in

# திருவண்ணாமலை மாவட்டத்தில் 8 தொகுதிகளில் 171 மனுக்கள் ஏற்பு

**நாளை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியீடு**

**திருவண்ணாமலை**

திருவண்ணாமலை மாவட்டத்தில் 8 தொகுதிகளில் 171 மனுக்கள் ஏற்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம்(தனி), திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி (தனி) ஆகிய 8 சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிடும் திமுக, அதிமுக, தவெக உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை சட்டப்பேரவை தொகுதியில் திமுக வேட்பாளர் அமைச்சர் எ.வ.வேலு, பாஜக வேட்பாளர் ஏழுமலை, தவெக வேட்பாளர் அருள் ஆறுமுகம் உட்பட மொத்தம் 32 மனுக்கள் ஏற்கப்பட்டன.

செங்கம் (தனி) தொகுதியில் திமுக வேட்பாளர் மு.பெ.கிரி, அதிமுக வேட்பாளர் வேலு மனுக்கள் உட்பட 15 மனுக்கள் ஏற்கப்பட்டு, 21 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. கீழ்பென்னாத்தூர் தொகுதியில் திமுக வேட்பாளர் கு.பிச்சாண்டி, அதிமுக வேட்பாளர் எஸ்.ராமச்சந்திரன் மனுக்கள் உட்பட 17 மனுக்கள் ஏற்கப்பட்டன.

கலசப்பாக்கம் தொகுதியில் திமுக வேட்பாளர் பெ.சு.தி. சரவணன், அதிமுக வேட்பாளர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி மனுக்கள் உட்பட 21 மனுக்கள் ஏற்கப்பட்டன.

போளூர் தொகுதியில் தேமுதிக வேட்பாளர் சரவணன், பாமக வேட்பாளர் பாஸ்கரன் மனுக்கள் உட்பட 25 மனுக்கள் ஏற்கப்பட்டன. ஆரணி தொகுதியில் திமுக வேட்பாளர் மகாலட்சுமி, அதிமுக வேட்பாளர் ஜெயசுதா மனுக்கள் உட்பட 27 மனுக்கள் ஏற்கப்பட்டன.

செய்யாறு தொகுதியில் திமுக வேட்பாளர் ஜோதி, அதிமுக வேட்பாளர் முக்கூர் என்.சுப்பிரமணியன் மனுக்கள் உட்பட 18 மனுக்கள் ஏற்கப்பட்டன.

மேலும், செய்யாறு தொகுதியில் தவெக வேட்பாளர் தூசி கே.மோகன் மனைவி பார்வதி தவெக மாற்று வேட்பாளராக மனுத்தாக்கல் செய்திருந்தார். மனுபரிசீலனையில் மோகன் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து, பார்வதி தனது மனுவினை திரும்பப் பெற்றுக் கொண்டார். வந்தவாசி (தனி) திமுக வேட்பாளர் அம்பேத்குமார், அதிமுக வேட்பாளர் ராணி மனுக்கள் உட்பட 16 மனுக்கள் ஏற்கப்பட்டன.

நாளை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட உளளது.



காவேரிப்பாக்கம் அடுத்த புதுப்பட்டு அரசு பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

**காவேரிப்பாக்கம் அடுத்த புதுப்பட்டில்**

## மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கல்

**அரக்கோணம்**

காவேரிப்பாக்கம் அடுத்த புதுப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவுக்கு, பள்ளியின் தலைமை ஆசிரியர் தனஞ்செழியன் தலைமை தாங்கிப் பேசும்போது, “பெருகிவரும் உலக வெப்ப மயமாதலைத் தடுக்க நிறைய மரக்கன்றுகளை நட்டு இந்த பூமிப் பந்தினை பரா மரிக்க வேண்டியது மாணவர்களின் தலையாய கடமை" என்றார்.

இதில், பள்ளி மாணவர்களுக்கு 350 கொய்யாப்பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மரக்கன்றுகளைப் பள்ளியில் முன்னாள் உயிரியல் ஆசிரியர் அருளானந்தம் வழங்கினார்.

இதில், பள்ளியின் மேலாண்மை குழு தலைவர் லட்சுமி யுவராஜா, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முருகவேல் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பலர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளைப் பள்ளியின் சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் பாக்யராஜ் செய்திருந்தார்.



ராணிப்பேட்டை மாவட்டத்தின் தேர்தல் விழிப்புணர்வு சின்னமாக செம்மான் உருவ இலச்சினையை (லோகோ) மாவட்ட ஆட்சியர் சந்திரகலா வெளியிட்டார்.

**மாவட்ட அளவிலான சுற்றுச்சூழல் போட்டி**

## நாட்றம்பள்ளி அரசு பள்ளி மாணவர்கள் முதலிடம்

**திருப்பத்தூர்**

மாவட்ட அளவிலான சுற்றுச்சூழல் போட்டிகளில் அரசுப் பள்ளி மாணவர்கள் முதலிடம் பெற்றனர்.

திருப்பத்தூர் மாவட்ட அளவிலான சுற்றுச்சூழல் இயற்கை முகாம் காவலூர் வானிலை ஆய்வு மையத்தில் 2 நாட்கள் நடைபெற்றது. தமிழ்நாடு காலநிலை மாற்றுத் துறை, இந்திய வானியல் ஆய்வு மையம், பள்ளிக்கல்வித்துறை இணைந்து நடத்திய முகாமில் வானியல் குறித்த விநாடி வினா, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த கட்டுரை, பேச்சு, ஓவிய விழிப்புணர்வு, மரபு சாரா எரிசக்தி விழிப்புணர்வு ஆகிய போட்டிகளில் 25 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 150 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த போட்டிகளில் நாட்றம்பள்ளி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி 9-ம் வகுப்பு மாணவர்கள் சரண்ராஜ், அன்பரசன், சீனிவாசன், ஸ்ரீஹரி, விக்ரம் ஆகிய மாணவர்கள் அனைத்து போட்டிகளிலும் முதலிடம் பெற்றனர்.



மாவட்ட அளவிலான சுற்றுச்சூழல் போட்டிகளில் நாட்றம்பள்ளி அரசு பள்ளி மாணவர்கள் முதலிடம் பெற்றனர்.

வழிகாட்டி ஆசிரியரும், திருப்பத்தூர் மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளருமான ரவிவர்மன் மற்றும் 5 மாணவர்களுக்கும் தலைமை ஆசிரியர் சங்கரன் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மாணவர்களை ஆசிரியர்கள் பாராட்டினர்.

வரி விளம்பரங்கள்

பொது

பொது அறிவிப்பு

**பொது அறிவிப்பு**

**கல் குவாரி**

இடம்: S.F. எண். 419 (பகுதி-6), விண்ணமங்கலம் கிராமம், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம், தமிழ்நாடு.

அகழ வேண்டிய அளவு

விஸ்தீரணம் : 2.00.0 ஹெக்டேர்

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதீப்பிட்டு ஆணையம், சென்னை-15. கோப்பு எண்.13296 (SEIAA) கடித எண் எண். SIA/TN/MIN/566059/2026 EC. ID No.EC26C0108TN5508450N Dated: 02.04.2026 படி சுற்றுச்சூழல் தடையில்லா சான்று வழங்கியுள்ளது. இச்சான்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடமும் கிடைக்கும். SEIAA அமைப்பின் வலைதளத்திலும் பார்க்கலாம். 09.03.2026 அன்று பெறப்பட்ட சுற்றுச்சூழல் தடையில்லா கடிதத்தின் படி வெளியிடப்படுகிறது.

**A.B.ஐயப்பன்**

த/பெ. பாலசுப்ரமணியன், எண்.546, ஆஞ்சநேயர் கோயில் தெரு, கோட்டை, வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம்.

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

**AGS டிரான்சாக்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட்**

(நிறுவனத் திவால் தீர்வுச் செயல்முறையின் கீழ்)

**பதிவு அலுவலகம்: 605-606, டிரேட் வேர்ல்ட், பி-விங், கமலா மில்ஸ் வளாகம், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை - 400013.**

பொதுமக்கள், நில உரிமையாளர்கள், சொத்து உரிமையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், AGS டிரான்சாக்ட் டெக்னாஜிஸ் லிமிடெட் (“நிறுவனக் கடனாளி”), தற்போது 2016 ஆம் ஆண்டின் திவால் மற்றும் நொடித்துப்போதல் சட்டத்தின் விதிகளின் கீழ் நிறுவன திவால் தீர்மான செயல்முறைக்கு (CIPR) உட்பட்டுள்ளது என்பதும், அந்த நிறுவனக் கடனாளி, இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு வளாகங்களில், அந்தந்த சொத்து உரிமையாளர்கள்/நில உரிமையாளர்களுடன் செய்து கொண்ட வாடகை/விடுப்பு மற்றும் உரிம ஏற்பாடுகளின் கீழ், வளாகத்திற்கு வெளியே தானியங்கி பண இயந்திரங்கள் (ATMs) / பண மறுசுழற்சி இயந்திரங்களை (CRMs) நிறுவி இயக்கி வந்தது என்பதுமாகும்.

நிறுவனக் கடனாளி CIRP-ன் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நிறுவனக் கடனாளிக்கு எதிராக நிலுவைத் தொகைகள் உள்ள வீட்டு உரிமையாளர்கள் உட்பட பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெறுவதற்காக, கீழ் கையொப்பமிட்டவர் 27 ஆகஸ்ட் 2025 அன்று “படிவம் A” -ல் ஒரு பொது அறிவிப்பை வெளியிட்டார் இவ்வறிவிப்பானது (1) Free Press Journal - மகாராஷ்டிரா பதிப்பு (ஆங்கிலம்) மற்றும் (2) நவ்சக்தி - மகாராஷ்டிரா பதிப்பு (மராத்தி) ஆகிய இதழ்களில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட பொது அறிவிப்பிற்கான ஒரு திருத்த அறிவிப்பும் 3 செப்டம்பர் 2025 அன்று வெளியிடப்பட்டது.

தற்போது Off-Site ATM மையங்கள் செயல்படாத நிலையில் உள்ளன என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது, அதற்கிணங்க CIRP தொடங்கியதன் காரணமாக, அவ்வாறு செயல்படாத ATM மையங்கள் தொடர்பான வாடகை/விடுப்பு மற்றும் உரிம ஒப்பந்தங்கள் அனைத்தும், 2025 ஆகஸ்ட் 25 ஆம் தேதி முதல் ரத்து செய்யப்பட்டதாகவும் மற்றும்/ அல்லது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் கருதப்படும்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, CIRP தொடங்கிய தேதி அதாவது 25 ஆகஸ்ட் 2025 முதல், அவ்வாறு செயல்படாத ATM மையங்கள் தொடர்பான வாடகை, உரிமக் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள், பராமரிப்புக் கட்டணங்கள் அல்லது வேறு எவ்வகையான நிலுவைத் தொகைகளையும் செலுத்துவதற்கு நிறுவனம் பொறுப்பேற்காது.

மேலும், தற்போது அல்லது இனிவரும் காலத்தில் சமர்ப்பிக்கப்படும் எத்தகைய கோரிக்கைகள் அல்லது உரிமைகோரல்களும், “2016-ஆம் ஆண்டின் திவால் மற்றும் நொடிப்புநிலைச் சட்டம்” மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிமுறைகளின்படியே பரிசீலிக்கப்பட்டு கையாளப்படும்.

மேலும் தெளிவுபடுத்தப்படுவது என்னவென்றால், அத்தகைய இடங்களில் நிறுவப்பட்டுள்ள ATM இயந்திரங்கள், பாதுகாப்புப் பெட்டகங்கள், மின்னணு உபகரணங்கள், அறிவிப்புப் பலகைகள் மற்றும் அது தொடர்பான பிற சொத்துக்கள், பெருநிறுவனக் கடனாளி மற்றும்/ அல்லது அந்தந்த வங்கிகளுக்குச் சொந்தமானவை ஆகும், மேலும், கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதி பெறாமல், எந்தவொரு நில உரிமையாளர், சொத்து உரிமையாளர் அல்லது மூன்றாம் தரப்பினரும் அந்தச் சொத்துக்களில் எதையும் அகற்றவோ அல்லது அப்புறப்படுத்தவோ கூடாது. அத்தகைய எந்தவொரு செயலும் உரிய சட்ட நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.

இந்த அறிவிப்பானது, பொதுமக்களுக்குத் தகவல் தெரிவிக்கும் நோக்கத்துடனும், அத்தகைய ATM அமைவிடங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எழக்கூடிய ஏதேனும் சர்ச்சைகள் அல்லது அங்கீகரிக்கப்படாத உரிமைகோரல்களைத் தவிர்க்கும் நோக்கத்துடனும் மட்டுமே வெளியிடப்படுகிறது.

Sd/-
CA பிரிஜேந்திர குமார் மிஸ்ரா
நியமிக்கப்பட்ட தீர்மான வல்லுநர்
AGS டிரான்சாக்ட் டெக்னாஜிஸ் லிமிடெட்- CIRP-ன்கீழ்
IBBI பதிவு எண்.: IBBI/IPA-002/IP-N00109/2017-2018/10257
AFA விவரங்கள்: AA2/10257/02/311226/204257 செல்லுபடியாகும் காலம் 31.12.2026
நாள்: 08.04.2026

pnb पंजाब नैशनल बैंक .......भरोसे का प्रतीक punjab national bank ...the name you can BANK upon! (A GOVERNMENT OF INDIA UNDERTAKING)

சொத்து மீட்பு மேலாண்மை கிளை தெற்கு டெல்லி, 4வது தளம், 7, பிகாஜி காமா பிளேஸ், புது டெல்லி-110066 Email : cs4168@pnb.bank.in

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம் 2002 மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) சட்டம் 2002-ன் விதி 8(6)-ன்கீழ் அசையா சொத்துக்கள் மின்-ஏலம் விற்பனை.** இதன்மூலம் பொது மக்களுக்கு பொதுவாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளவை வங்கி/கடன் அளித்தவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆக்கபூர்வ/பிசிக்கல்/சிம்பொலிக் எடுத்துள்ளார், முறையே கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) இடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க கீழ்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி “எங்கு உள்ளதோ”, “எப்படி உள்ளதோ” மற்றும் “எந்த நிலையில் உள்ளதோ” என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ரிசர்வ் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை சொத்துக்களின் எதிராக முறையே கீழ்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளன.

**அடமான சொத்துக்களின் விற்பனை அட்டவணை**

| வ. எண். | கிளை பெயர் / கணக்கு பெயர் / கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் கணக்கு பெயர் மற்றும் முகவரி | அடமான அசையா சொத்துக்கள் விவரம்/ உரிமையாளர் பெயர் (அடமான சொத்து(கள்)) | E) SARFAESI சட்டம் 2002-ன் விதி 13(2)-ன்கீழ் கோரிக்கை அறிவிப்பு நாள் / F) கோரிக்கை அறிவிப்பின்படி தொகை / G) SARFAESI சட்டம் 2002-ன் விதி 13(4)-ன்கீழ் சுவாதீன நாள் / H) சிம்பொலிக்/பிசிக்கல்/ ஆக்கபூர்வ சுவாதீனம் தன்மை | A) ரிசர்வ் தொகை / B) EMD / C) ஏலம் உயர்வு தொகை | மின்-ஏலம் நாள்/ நேரம் | கடன் அளித்தவரால் அறியப்படும் வில்லங்கம் விவரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ நோடல் அதிகாரி பெயர் மற்றும் தொடர்பு எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | **PNB BO Okhla NSIC (060200), புதுடெல்லி** **M/s. GENUINE INTERNATIONAL CC A/c எண். 3078008700001741 & CC A/c 4370008700001143** **M/s. Genuine International வழியாக K கணேஷ்** முகவரிகள் : • A-292. 2வது தளம், Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1 காவல் நிலையம் அருகில், டெல்லி-110020, • 416/2, கிராமம் மற்றும் PO ஜிடொமி, M G சாலை, டெல்லி-110030, • 165, காளி எண்.2, கபாஷ்ரா, புது டெல்லி-110037, • 365, Ice தொழிற்சாலை அருகில், கபாஷ்ரா, புது டெல்லி-110037, • காஷ்ரா எண்.156, சந்தன்ஹோலா, புது டெல்லி-110074, • D-88/3, Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1, டெல்லி-110020, • C-91, DDA ஷெட், Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1, டெல்லி - 110020, • மனை எண். 42, சிட்கோ தொழிற்சாலை எஸ்டேட், சிப்காட், ராணிபேட், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம் - 632403, சென்னை, • திரு. K கணேஷ் த/பெ. B கண்ணன், மனை எண். 104/FF KH No.788 Gali No.6D K பிளாக், மாலிக்பூர் கோஹி அலைஸ் ரங்பூரி தெற்கு மேற்கு டெல்லி - 110037. • திரு. K கணேஷ் த/பெ. B கண்ணன், கதவு எண். 429/1, பேஸ் 1 பாரதி நகர், வள்ளார் நகர், சத்துவாசாரி, வேலூர்-9, சென்னை. **திரு. N அசீஸ் ரஹ்மான் (ஜாமீன்தாரர்)** முகவரிகள் - கதவு எண். H4, பழைய ஹவுசிங் போர்ட், சிப்காட், ராணிபேட், வேலூர் மாவட்டம், சென்னை-632403. • வீட்டு எண்.4, TNHB குவார்ட்டர்ஸ், சிப்காட், ராணிபேட்-632403. • பழைய திருத்தனி சாலை விரிவு வடக்கு கிழக்கு முடிவு (ச.எண். 669/1a, 699/2a, ஆனந்தலை கிராமம்) மேல்புதுப்பேட், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம்-632513 • கதவு எண். 114, பழைய ஹவுசிங் போர்ட், சிப்காட், ராணிபேட், வேலூர் மாவட்டம், சென்னை-632403. • S5/525, அமீன் அப்பார்ட்மெண்ட் IOB நகர், சிப்காட், ராணிபேட் தொழிற்சாலை ஏரியா, வேலூர், தமிழ்நாடு - 632403. | அடமான சொத்தானது கதவு எண்./மனை எண்.42, சிட்கோ தொழிற்பேட்டை, சிப்காட், லேஅவுட் எஸ்.எப்.எண். 62,63,68,69 மற்றும் 70, காரை வருவாய் கிராமம் மற்றும் எஸ்.எப்.எண். 225, 226, 352 மற்றும் 353, நரசிங்கபுரம் வருவாய் கிராமம், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டத்திற்குட்பட்டது. அளவுகள் 7000 சதுர அடி. M/s. Genuine International மூலம் திரு. K கணேஷ் பெயரில் உள்ளது. | E) 08.04.2019 F)Rs.235.53 Lacs + further interest & expenses G) 20.12.2019 H) Symbolic | A)Rs.94.00 lacs B) Rs.9.40 lacs C) Rs. 1,00,000 | 28.04.2026 11:00 am to 04:00 pm | சொத்து விற்பனையில் SA நிலுவை/ வில்லங்கம் ஏதும் இல்லை | ரஜேஷ் குமார் 8451880664 |

**மின்-ஏலம் விற்பனை பற்றிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :** பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதி 2002-ல் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை நடைபெறும் மற்றும் பின்வரும் நிபந்தனைகள்.

**(1)** ஏல விற்பனையானது “ஆன்லைன் மூலம் மின்-ஏலம்” **https://www.baanknet.com** வழியாக நடைபெறும். **(2)** இணையதளம் **(https://baanknet.com)** வழியாக மின்-ஏலமானது மின்-ஏலம் சேவை வழங்குநர் M/s. PSB Alliance Pvt. Ltd. அதன் பதிவு அலுவலகம் யூனிட் 1, 3வது தளம், VIOS கமர்ஷியல் டவர், வடலா டிரக் டெர்மினர் அருகில், வடலா கிழக்கு மும்பை-400037 (உதவி எண். +91 8291220220, Email Id : support.ebkray@psballiance.com) மூலம் நடத்தப்படும். விருப்பமுள்ள ஏலதாரர்கள்/வாங்குபவர்கள் மின்-ஏலத்தில் பங்குபெற மின்-ஏலம் சேவை வழங்குநர் இணையதளம் https://ebkray.in பார்க்கவும். சேவை வழங்குநர் ஆன்லைன் செயல்விளக்கம்/பயிற்சி மின்-ஏலம் போர்ட்டல் வழியாக அளிப்பார்கள். **(3)** விற்பனை அறிவிப்பு தொகுப்பின் பொது நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும் (1) **https://baanknet.com (2) www.pnbindia.in (4)** வெற்றிகரமான ஏலதாரர் வங்கிக்கு செலுத்தும் தொகை விற்பனை வருவாய் வரி சட்டம் 1961 மற்றும் பிரிவு 194-1ஏ-ன்கீழ் TDS-க்கு பரிசீலனை உட்பட்டது மற்றும் மீதமுள்ள 75 சதவீதம் ஏலத்தொகை/ BIT தொகையின் முழு வைப்புத் தொகையை டெபாசிட் செய்யும் நேரத்தில் மட்டுமே வெற்றிகரமான ஏலதாரர் TDS செலுத்த வேண்டும். **(5)** சொத்தானது **“எங்கு உள்ளதோ” மற்றும் “எப்படி உள்ளதோ” மற்றும் “எந்த நிலையில உள்ளதோ”** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **(6)** மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவின்படி தகவலுக்கு கூறப்பட்டுள்ளன, ஆனால் எந்தவிதமான பிழை, பிழைஅறிக்கை அல்லது தவிர்த்தல் குறித்தவைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்கமாட்டார். **(7)** SARFAESI சட்டம், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 13(8) மற்றும் விதி 8(6)-ன்கீழ் மேற்குறிப்பிட்ட வ.எண். 01 முதல் வ.எண்.02 வரை அனைவருக்கும் வழங்கப்படும் அறிவிப்பாகும். (8) விவரங்கள் விற்பனை நிபந்தனைகளுக்கு தயவுசெய்து **https://baanknet.com & www.pnbindia.in** பார்வையிடவும்.

**நாள் : 07.04.2026, இடம் : புது டெல்லி** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் நேஷனல் வங்கி**

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

CH-VE